**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| 2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18–ம் நாள் சனிக்கிழமை பிரதிவாதி தரப்பு 1–ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண்.44வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி உதவியாளர் திருமதி. பாண்டிசெல்வி என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
|---|---|---|---|
| பெயர்: | **சுப்பிரமணியன்** | தொழில்: | |
| த.பெ: | | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**18.4.2026 OS.61/2021 பி.வா.சா.1. சுப்பிரமணியன்**

**பிரதி வாதி தரப்பு முதல் விசாரணை :**

நான் இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி ஆவேன். பிரதிவாதி தரப்பு 1 ஆம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் நிரூபணம் வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை படித்து காண்பித்து பின்பு நான் அதில் கையெழுத்து செய்துள்ளேன். பிராமண வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையது தான்.

எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்துகொள்ள வேண்டுகிறேன்.

1) திருப்புவனம் காவல் ஆய்வாளர், வட்டாட்சியர் ஆகியோர்களின் முன்னிலையில் கடந்த 25.04.2017ம் தேதியன்று கூட்டம் நடைபெற்றதற்கான கடிதம் நகல் தாக்கல் செய்கிறேன். **மேற்படி திருப்புவனம் காவல் ஆய்வாளர், வட்டாட்சியர் ஆகியோர்களின் முன்னிலையில் கடந்த 25.04.2017ம் தேதியன்று கூட்டம் நடைபெற்றதற்கான கடிதம் நகல் வாதிகள் தரப்பு ஆட்சேபணையோடு பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2) கோவில் பெயரில் பட்டா தரலாம் என சிவகங்கை வருவாய் கோட்டாட்சியருக்கு பரிந்துரை செய்யப்பட்ட கடிதம் நகல் தாக்கல் செய்கிறேன். **மேற்படி கோவில் பெயரில் பட்டா தரலாம் என சிவகங்கை வருவாய் கோட்டாட்சியருக்கு பரிந்துரை செய்யப்பட்ட கடிதம் நகல் வாதிகள் தரப்பு ஆட்சேபணையோடு பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.04.18 15:16:42 +0530

3) மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் W.P.(MD)No.16066/2020 என மனு தாக்கல் செய்து அதில் ஏற்பட்ட உத்தரவு கணினி நகல் தாக்கல் செய்கிறேன். **மேற்படி W.P.(MD)No.16066/2020 என மனு தாக்கல் செய்து அதில் ஏற்பட்ட உத்தரவு கணினி நகல் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**பிரதிவாதிகளுக்கு ஆதரவாக வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டி பிராத்திக்கின்றேன்.**

**(வாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).**

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.04.18 15:16:49 +0530

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam